**செ.வெ.எண்: 31** **நாள்: 15.09.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள தேர்தல் விதிகளை அரசு அலுவலர்கள் முறையாக செயல்படுத்த வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் 2016 முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15-9-2016) நடைபெற்றது.

இந்த பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சார்பில் விரைவில் ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் 2016 நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு நமது மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் தேர்தல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் தேர்தல்களுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்கள்) விதிகள் 1995 விதி எண்:25(1)ன்படி தேர்தல் குறித்த அறிவிப்பினை படிவம் 2ஏ-லும், கிராம ஊராட்சித்தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தல்களுக்கு விதி எண்:25(2)ன்படி தேர்தல் குறித்த அறிவிப்பினை படிவம் 2ஏ-லும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நிர்ணயம் செய்யும் தேதியில் வெளியிட வேண்டும். இப்படிவங்களில் பூர்த்தி செய்யப்படவேண்டிய இனங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். மேலும் தேர்தல் அறிவிக்கை வெளியிட்டது தொடர்பான ஒருங்கிணைந்த அறிக்கையினை மாவட்ட தேர்தல் அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வேட்பு மனுக்களைப் பெற தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நிர்ணயம் செய்யும் நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வேட்புமனுக்களை அதற்கென தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் படிவம் 3ல் பெற வேண்டும். வேட்பு மனுக்களுக்கான விலையினை வேட்பு மனு தாக்கல் செய்யும் நபர்களிடமிருந்து வசூல் செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலக கருவூலத்தில் தினசரி செலுத்த வேண்டும். மேலும் தினசரி பெறப்படும் வேட்பு மனுக்கள் குறித்த விபரங்களை படிவம் 4ல் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் தெரிவிக்க வேண்டும்.

மேலும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திட நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடைசி நாள் வரை பெறப்பட்ட வேட்பு மனுக்களின் பட்டியலை படிவம் 5ல் வெளியிட வேண்டும். வேட்பு மனு உரிய படிவத்தில் இருப்பதுடன் வேட்பு மனுவுடன் ஆணை உறுதி ஆவணம் உரியவாறு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு பதவியிடம் எஸ்.சி அல்லது எஸ்.டிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில் வேட்பாளர் வேட்பு மனுவுடன் தான் ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பினரை சார்ந்தவர் என்ற உறுதிமொழியினை அளித்தல் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விதிமுறைகள் குறித்து அலுவலர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டுள்ள அரசு அலுவலர்கள் இப்பயிற்சியினை முறையாக கற்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வகுத்துள்ள தேர்தல் விதிமுறைகளை தேர்தலின் போது முறையாக செயல்படுத்தி சிறப்பாக தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இப்பயிற்சி வகுப்பில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.மிருணாளினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப்பிரிவு) திரு.ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**